**<u>12.02.2018</u>**

**<u>பொருள் எண்.1</u>**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ1 நாள்.23.09.2017 உடன் இணைத்து வரப்பெற்ற Tamilnadu Local Bodies Delimitation Regulations 2017 ல் தெரிவித்துள்ள விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு மறுவரையறை ஆணைய சுற்றறிக்கை D – 11/2017 மற்றும் ந.க.எண்.3174/2017/தே.பொ1 நாள்.19.10.2017 மற்றும் 13.12.2017 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படியும் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண்.389 நாள்.15.12.2017 ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி வார்டு மறுவரையறை வரைவு பிரேரணையை மாவட்ட மறுவரையறை அதிகாரி / மாவட்ட ஆட்சித்தலைவர் நாமக்கல் அவர்களின் வழியாக துறைத்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன்பேரில், உறுப்பினர் செயலாளர் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அவர்களின் சுற்றறிக்கை D – 14/2017 மற்றும் ந.க.எண்.3174/2017/தே.பொ1–2 நாள்.27.12.2017 கடிதத்தில் ஆணையத்தால் சரிபார்க்கப்பட்ட மறுவரையறை கருத்துக்களை / வரைபடங்களை வெளியீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அரசியல் கட்சியினர் மற்றும் பொது மக்களிடமிருந்து 40 எண்ணிக்கை ஆட்சேபனைகள் வரப்பெற்றது. அதனை தொடர்ந்து 10.02.2018 அன்று தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்ட மண்டல அளவிலான ஆய்வு கூட்டத்தில் தெரிவித்த அறிவுரைகளின்படி பெறப்பட்ட மனுக்களின் மீது ஆய்வு செய்து உரிய திருத்தம் செய்யப்பட்டது. இறுதி வார்டு மறுவரையறை முன்மொழிவு தயார் செய்து மாவட்ட மறுவரையறை அதிகாரி மாவட்ட ஆட்சித்தலைவரின் வழியாக துறைத்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம்.

(கோப்பு எண்.6940/2017/அ3)

**<u>பொருள் எண்.2</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் வார்டுகள் மறுவரயறை செய்யக் கோரி வரப்பெற்ற கடிதங்களின் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி படிவங்களை Scan செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்,நாமக்கல் அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் அதற்காகும் செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவு செய்தமைக்கு மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண்.6940/2017/அ3)

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN34 R3567 வாகனத்திற்கு புதிய டயர் மற்றும் டியூப் (MRF 8.25x16 Super Miller 99 Tyer Tube Flab 1 set) புதியதாக வாங்குவதற்கு திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்தில் வாங்க உத்தேச செலவினம் தொகை ரூ.21,500/-க்கு மன்ற முன்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும் பொதுநிதியில் இருந்து தொகையினை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.199/18/எச்1)

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் 33 வார்டுகளில் உள்ள மழைநீர் வடிகால்களை சீரமைத்தும், தூர்வாரியும், லாரி இயந்திரங்கள் மூலம் பணியினை மேற்கொள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் | பணியின் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஈஸ்வர மூர்த்தி எர்த் மூவர்ஸ் ஒட்டணகிரி, மோரூர், சங்ககிரி | 1) ஜே.சி.பி. (1 மணி நேரம்) | ரூ.700/- |
| | | 2) கிட்டாட்சியில் தூர்வார (1மணி நேரம்) | ரூ.1250/- |
| | | 3) லாரி டிப்பர் (லோடு ஒன்றுக்கு) | ரூ.1800/- |
| 2 | அம்மன் எர்த் மூவர்ஸ் | 1) ஜே.சி.பி. (1 மணி நேரம்) | ரூ.750/- |
| | | 2) கிட்டாட்சியில் தூர்வார (1மணி நேரம்) | ரூ.1300/- |
| | | 3) லாரி டிப்பர் (லோடு ஒன்றுக்கு) | ரூ.1900/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறைவாக உள்ளதால் வரிசை எண்.1ன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் தனி அலுவலர் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும் பொதுநிதியில் இருந்து தொகையினை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.7110/18/எச்1)